# OUR LADY OF GOOD HEALTH PARISH
# தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

**131 Birchmount Road, Scarborough, ON M1N 3J7**
416-264-OLGH (6544) **: Phone**
416-264-6545 **: Fax**
office@olghtamilparish.com **: Email**
www.olghtamilparish.com **: Website**

**06/08/2021**



என் அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே,

உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோவிட்-19 நோய் பரவல் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, ஒன்ராரியோவின் குறைந்து வரும் நிலையில், இதுவரை இங்கு நடைமுறையில் இருந்துவந்த முடக்கநிலை, இவ்வாரத்திலிருந்து படிப்படியாக, மூன்று நிலைகளில் தளர்த்தப்படுவதாக மாகாண அரசு அறிவித்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்த அறிவிப்பிற்கு அமைவாக, ரொறன்ரோ அதியுயர் மறைமாவட்டமும், ஆலய வழிபாடுகள் விடயத்தில் சில தளர்வுகளை அறிவித்துள்ளது.

இவ்வாரம் வெள்ளிக்கிழமை, யூன் 11ம் திகதியிலிருந்து, ஆலயத்தினுள் 15 வீதமான மக்களுடன் திருப்பலி நடாத்த அனுமதி வழங்கப்படுகின்றது. எனவே, எமது இந்த ஆலயத்தில், திருப்பலிக்கு 50 பேர் அனுமதிக்கப்படுவார்கள். இந்த வெள்ளிக்கிழமையிலிருந்து, இந்த ஆலயத்தில் நடைபெறும் அனைத்து பொது திருப்பலி வழிபாடுகளுக்கும், முன்பதிவு அவசியம் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். பதிவு செய்தவர்கள் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக ஆசனங்கள் இருந்தால் மட்டுமே, ஏனையவர்கள் எவரும் அனுமதிக்கப்படுவார்கள்.

வெள்ளிக்கிழமை 11ம் திகதி, மாலை 7 மணிக்கு, தமிழில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
இவ்வாரம் சனிக்கிழமை 12ம் திகதி, மாலை 7 மணிக்கு தமிழில் திருப்பலி இடம்பெறும்.

இவ்வாரம் ஞாயிற்றுக்கிழமை 13ம் திகதி, தூய அந்தோனியார் பெருவிழா எமது ஆலயத்தில் கொண்டாடப்படுகிறது.

தூய அந்தோனியார் பக்தர்களின் வசதிக்காக, எமது ஆலயத்தில் மேலதிக திருப்பலிகள் தமிழில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இந்த வழிபாடுகள் அனைத்திற்கும் உங்கள் இருக்கைகளை முன்பதிவு செய்வது அவசியம்.

**தூய அந்தோனியார் பெருவிழா திருப்பலிகள்**
காலை 10:30, மதியம் 12:30, மதியம் 2:00, மாலை 3:30, மாலை 5:00, மாலை 7:00 மணிக்கு திருப்பலிகள் இடம்பெறும். மாலை 7:00 பெருவிழா திருப்பலியின் இறுதியில் பக்தர்கள் அனைவரும் ஆலயத்தினுள்ளே அமர்ந்திருக்க, தூய அந்தோனியார் திருச்சுரூபம் ஆலயத்தைச் சுற்றி, பவனியாக எடுத்து வரப்படும். திருச்சுரூபப் பவனியில் குருக்களும் துறவியரும் பவனிக்கான விசேட உதவியாளர்களுமே அனுமதிக்கப்படுவார்கள். வழிபாட்டின் இறுதியில், தூய அந்தோனியார் சுரூப ஆசீரும் இடம்பெறும்.

அனைத்து வழிபாடுகளுக்கும், முன்பதிவு அவசியம் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அத்துடன், கோவிட்-19 தொற்றின் தாக்கமும் விளைவுகளும் தொடர்ந்தும் எதிர்பார்க்கப்படுவதால், உங்கள் உடல் உள நலன்களில் நீங்கள் தொடர்ந்தும் போதிய கவனம் எடுப்பது முக்கியமானது. எனவே, முகக்கவசம் அணிவதும், போதிய இடைவெளியைப் பேணுவதும் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். திருப்பலியின் முடிவில், ஆலயத்திலிருந்து உடனடியாக வெளியேறி, ஆலயத்தை சுத்திகரிப்பதற்கு உதவும் படியும், வாகனத் தரிப்பிடத்தில் சந்தித்து கதைப்பதைத் தவிர்த்து, உடனடியாக அங்கிருந்து வாகனங்களை எடுத்துச் செல்வதன் மூலம், எமது பாதுகாப்பிற்கு நாம் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கலாம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கோவிட் தொற்றின் அறிகுறிகள் அல்லது இது தொடர்பான நோய்த் தாக்கங்கள் உள்ளவர்களும், உடற்பலவீனமுள்ளவர்களும், முன்னெச்சரிக்கையை கருத்தில் கொண்டு, நேரடியாக ஆலயத்திற்கு வருவதை தற்காலிகமாக தவிர்த்துக்கொள்வது நல்லது.

நீங்கள் வீட்டிலிருந்தே திருப்பலியை இணையவழியில் ஒப்புக்கொடுப்பதற்கு வசதியாக, வழமைபோன்று, அனைத்து வழிபாடுகளும், நேரலையாக முகநூல் மற்றும் இணையத்தளம் ஊடாக, ஒளிபரப்பு செய்யப்படும்.

இந்த நேரலை ஒளிபரப்பிற்கு உதவ விரும்புவோர், எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். உங்களது பெயர் விபரங்கள் திருப்பலியின் ஆரம்பத்திலும் முடிவிலும் அறிவிக்கப்படும்.

அவசர தொடர்புகளுக்கு, கிழமை நாட்களில் காலை 9:00 மணியிலிருந்து மதியம் 12:00 மணிவரை, எமது அலுவலக தொலைபேசியில் அழைத்து பேசலாம் (416-264-6544).

இறை இயேசுவின் ஆசியும் வாழ்த்துக்களும் கூறி நிற்கும்,
உங்கள் பணியாளன்,

**அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்**
**பங்குத்தந்தை, தூய ஆரோக்கிய அன்னை தமிழ்ப் பங்கு**

தொலைபேசி: 416-264-6544
மின்னஞ்சல்: office@olghtamilparish.com
இணையத்தளம்: www.olghtamilparish.com
முகநூல்: https://www.facebook.com/OLGHTamilParish
வலைஒளி: https://www.youtube.com/olghtamilparish